# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil ₹ 10/-

India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE REACHING NATIONS

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: SIS. SERENA BEVIN

Vol. XXVIII | AUGUST 2023 | No. 08


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்.

### சங்கீதம் 103:8-17

8. கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்.
9. அவர் எப்பொழுதும் கடிந்து கொள்ளார்; என்றைக்கும் கோபங் கொண்டிரார்.
10. அவர் நம்முடைய பாவங்களுக்குத் தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார்.
11. பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது.
12. மேற்குக்கும், கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்.
13. தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்.
14. நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்; நாம் மண்ணென்று நினைவுகூருகிறார்.
15. மனுஷனுடைய நாட்கள் புல்லுக்கு ஒப்பாயிருக்கிறது; வெளியின் புஷ்பத்தைப்போல் பூக்கிறான்.
16. காற்று அதின்மேல் வீசினவுடனே அது இல்லாமற்போயிற்று; அது இருந்த இடமும் இனி அதை அறியாது.
17. கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள்மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள்மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது.



## ஆகோர் பள்ளத்தாக்கு : நம்பிக்கையின் வாசல்!



போதகர் ஏஞ்சலின் செல்வகுமாரி

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் வாழ்த்துக்கள். 2023 ஆம் வருடமாகிய இவ்வருடத்தின் கடந்த 7 மாதங்களும் நம்மைக் காத்து வந்த கர்த்தருடைய கிருபைக்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன். சிலருக்கு, இதுவரை இவ்வருடம் ஆசீர்வாதமான வருடமாக இருக்கலாம். சிலருக்கு அப்படியில்லாமலும் இருக்கலாம். சிலருக்கு, தங்கள் வாழ்க்கையிலேயே மிகவும் மோசமான வருடமாக, இவ்வருடம் காணப்படலாம்; ஆனால் வேறு சிலருக்கோ, இவ்வருடம்தான் அவர்கள் முன்னேற்றத்திற்கு மிகவும் பிரயோஜனமான வருடமாக இவ்வருடம் காணப்படலாம்! எது எப்படியாயிருந்தாலும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் கர்த்தர் நல்லவராகவே இருக்கிறார் என்றும், அவர் செய்வதெல்லாம் நல்லதாகவே இருக்கிறது என்றும் நாம் ஒருபோதும் மறந்துபோகக் கூடாது. நல்லதோ, கெட்டதோ, மோசமானதோ, எதுவாயிருப்பினும், நாம் நமது எதிர்பார்ப்புகள், நம்பிக்கை, தைரியம் ஆகியவற்றை அவர்மேல் வைத்திருப்போமானால், அனைத்தையும் நன்மையாகவே கர்த்தர் மாற்றுவார். அவர் உண்மையுள்ள தேவனாகவும், நல்ல தகப்பனாகவும் இருப்பதால், அவருடைய நேரத்தில் அனைத்தையும் ஆசீர்வாதமானதாக மாற்றித் தருவார்.

தொடர்ச்சி 4-ம் பக்கம்.....


அழைப்பின் எதிரொலி!



**கிறிஸ்தவ யூடியூப் சானல்!**

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன் நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!

5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு

தினந்தோறும் - காலை 5.00 மணிக்கு

தமிழ் ஞாயிறு ஆராதனை - காலை 8.30 மணிக்கு

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)

## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...





### OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.


**CHIEF EDITOR**

Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**ADMINISTRATION**

Bro. N. Prakasam, M.A., General Manager
Dr. Rabinder Boaz, M.S.
Bro. K. Puratchivendan

**EDITORIAL BOARD**

Sis. Jesy Veena Sam
Sis. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Dr. A. Richard Samuel, M.A., Ph.D.
Rev. Dr. K.R. Rajasekaran



**EDITOR, PUBLISHER & PRINTER**

Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers



10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 95661 31858

**E.mail ID**

sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITES**

www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com

**YOUTUBE CHANNEL**

Echo of His Call


**“. கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக் கடவர்.” – எண்ணாகமம் 6:24**

## வலை கிழிகிறது! இது உங்கள் நேரம்!

கர்த்தருக்குள் மிகவும் பிரியமான தேவபிள்ளைகளே!

ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் உங்களை அன்புடன் வாழ்த்துகிறோம்.

எப்படியாகிலும், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உலகமெங்கும் எடுத்துச் செல்ல வேண்டும் என்ற அகில உலகப் பார்வையில் கீழ்க்காணும் நமது முக்கிய ஊழியங்கள் தூரக்கட்டுப்பாடுகளை மீறி (beyond the boundaries) நகர்ந்து வருகின்றன.

1. **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை –16 மொழிகளில் (தபால் மற்றும் இ.மெயில் மூலம்)
2. தபால் மூலம் வேதாகமக் கல்விகள் (தமிழ், ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளில்)
3. தலைமைச் சபை மற்றும் கிளைச் சபை ஊழியங்கள்
4. **நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்** (சேப்பாக்கம்–தமிழ், சந்தோஷபுரம்–தமிழ் மற்றும் வேளச்சேரி– இந்தி)
5. **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி** (ஆங்கில வழி)
6. **அழைப்பின் எதிரொலி** அச்சகம்
7. **அழைப்பின் எதிரொலி யூடியூப்** மூலம் தினசரி காலை 5 மணி முதல் 5 நிமிட தேவசெய்திகள் (தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம்), ஞாயிறு தேவசெய்திகள் மற்றும் இவற்றுடன் உள்ள இணை (ஊடக) ஊழியங்கள்.

இதற்கு தேவன் தன் கிருபையை அளித்து வருகிறார். நீங்கள் ஜெபிக்கும் ஜெபங்களும், அளிக்கும் உற்சாக வார்த்தைகளும், உதவிகளும் இதனை உறுதிப்படுத்துகின்றன. இவற்றை உண்மையுடனும், உத்தமத்துடனும் செயல்படுத்துவதால், பிசாசானவன், வெளியில் சொல்லமுடியாதப் பல்வேறு திட்டங்களால் எங்களைத் தாக்க முற்படுகிறான். எங்களுக்காக ஜெபிப்பீர்களா?



பட்டம் பெற்ற சில மாணவர்களுடன் பாஸ்டர் சாம்

நம்முடைய **நெகேமியா வேதாகமக் கல்லூரியின்** செயல்பாடுகள் மிகவும் வேகமாக வளர்ந்து வருகின்றன. தபால் மூலம் **வேதாகமக் கல்விகளை (வேதாகம தபால் கல்வி (BIBLECOR)** மற்றும் **அஞ்சல்வழி இறையியல் கல்வி** (THEOLOGICAL CORREPONDENCE COURSES)) நடத்த வழிவகுத்த ஆண்டவர் இப்போது பல்வேறு புதிய நேர்முகக் கல்விகளை (மாலை மற்றும் தங்கிப் படிக்கும் வசதியுடன்–Regular & Residential) நடத்த உதவியுள்ளார்.

கடந்த ஜூன் 4–ம்தேதி நம்முடைய **நெகேமியா வேதாகமக் கல்லூரியின்** சிறப்பு அழைப்பாளர்களின் கூடுகை நம்முடைய சந்தோஷபுரம் ஊழிய வளாகத்தில் நடந்தது.

Our Ministries: ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) BIBLECOR - Postal Courses (3 languages) Media Ministry Online Courses Theological Correspondence Courses (2 languages) Church Planting Nehemiah Bible Colleges Gospel Printing Press Great Commission Partners St. Paul's Matriculation School Crusades Community Development



நெகேமியா வேதாகமக்கல்லூரியின் சிறப்புக் கூடுகை – சந்தோஷபுரம்

நமது சந்தோஷபுரம் ஊழிய வளாகத்தில் **நெகேமியா வேதாமகக் கல்லூரியின்** மூன்றாம் கல்லூரியை ஆரம்பிக்கவும், C.Th., Dip.Th. மற்றும் B.Th. போன்ற இறையியல் கல்விகளை நடத்தவும் ஜெபத்துடன் தீர்மானித்து, தொடர் நடவடிக்கைகளில் மும்முரமாக செயல்பட்டு வருகிறோம். இந்த நெருக்கடியும், கஷ்டமுமான சூழ்நிலையிலும் ஓர் புதிய ஊழியமா? என்றக் கேள்வி பொதுவாக தேவ மக்கள் உள்ளங்களில் எழுந்தாலும், தேவன் எங்களை இப்படியான புதியத் திட்டத்தை அமல்படுத்த உந்தித் தள்ளுகிறார் என்பதுதான் உண்மை. செய்யாமல் இருக்க முடியவில்லை. எல்லாம் தேவ சித்தப்படி நடக்கும்.

ஒரே ஒரு வாழ்க்கை! அதுவும் வேகமாகக் கடந்து சென்று விடுகிறது!! எனவே முடிந்ததை எல்லாம் இயேசு கிறிஸ்துவுக்காகச் செய்து முடிப்போம் என்பது எமது இதயத் துடிப்பு!

ஏற்கனவே, 200 பேருக்கு மேலான முழுநேர மற்றும் தன்னார்வ ஊழியர்களுடன் நடைபெறும் பல்வேறு ஊழியங்களை நடத்துவதற்குப் போதுமான ஊழியர்கள் மற்றும் பொருளாதாரம் இல்லாவிட்டாலும் **விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்.** ஆபகூக் 2:4, எபிரெயர் 10:38 என்ற வேத வார்த்தையின்படி போர்க்கால அடிப்படையில் இப்புதிய ஊழியத் திட்டத்தை நடத்தும்படி நாங்கள் முன்னேறிச் செல்லுகிறோம்.





பரிசுத்த வேதாகமம் லூக்கா 5–ஆம் அதிகாரத்தில் தங்கள் சக்திகளுக்கு மேல் அதிகப்படியான மீன்களைப் பிடிக்க ஆண்டவர் இயேசு தமது சீஷர்களை வழிநடத்தினார். அப்போது தங்கள் வலை கிழியத் தக்கதாக மீன்கள் அகப்பட்டன. அவர்களால் கையாள முடியாத காரணத்தால் தங்கள் பக்கமாக மீன்பிடித்துக் கொண்டிருந்த மற்ற மீனவர்களையும் உதவிக்கு அழைத்தார்கள்.

**அப்பொழுது மற்றப் படவிலிருந்த கூட்டாளிகள் வந்து தங்களுக்கு உதவி செய்யும் படிக்குச் சைகை காட்டினார்கள்; அவர்கள் வந்து, இரண்டு படவு களும் அமிழத்தக்கதாக நிரப்பி னார்கள்.** (லூக்கா 5:7)

அதேப்போல் இன்று ஆண்டவர் நமது **அழைப்பின் எதிரொலியின்** ஊழியங்கள் எல்லாவற்றையும் அபரிமிதமாக ஆசீர்வதித்து எண்ணுக்கடங்காத அற்புதங்களைச் செய்து கணக்கிலடங்காத அழிந்துபோகும் ஆத்துமாக்களை நமக்குக் கொள்ளைப் பொருட்களாகத் தந்து வருகிறார்.

எனவே இதனை வாசிக்கும் உங்களையும் நாங்கள் சைகை காட்டி கூவி அழைக்கிறோம். நமது ஊழியங்களைப் பாருங்கள்! நமது ஊழியர்களை நேரடியாகப் பாருங்கள்!! இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசம் எப்படி செயல்படுகிறது என்பதை அறிவீர்கள்.

எவ்வித நிரந்தரப் பொருளாதார வருமானமும் இல்லாவிட்டாலும், ஒவ்வொரு நாளும் எப்படித் தம்மை விசுவாசிக்கிற



மக்களை ஆண்டவர் இயேசு கிறிஸ்து காப்பாற்றுகிறார் என்னும் அவருடைய உண்மைத் தன்மையைப் பாருங்கள். **உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர். அவர் அப்படியே செய்வார்.**

1 தெசலோனிக்கேயர் 5:24.

நமது வலைகள் ஆத்துமாக்களால் கிழிகின்றன. விளம்பரம் இல்லாத ஏராளமான ஊழியங்கள்! ஏராளமான ஊழியர்கள்!! நடத்த முடியாமல் திணறுகிறோம். எங்களுடன் ஏதாவது ஒரு வழியில் இணைந்து செயல்பட முன் வாருங்கள். ஆத்துமாக்களால் கிழிந்து கொண்டிருக்கும் வலையாகிய **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களுக்குக் கை கொடுத்து ஆதரியுங்கள். இவ்வருடம் ஆகஸ்டு 10ம் தேதி **அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்** தனது 55–ம் ஆண்டுக்குள் பிரவேசிக்கிறது. கர்த்தருடைய அநாதி கிருபைதான் நமது ஊழியங்களை இன்றுவரை நடத்தி வருகிறது. நமது ஊழியத்தின் கஷ்ட காலங்களும், நெருக்கடிகளும் மாற ஜெபியுங்கள். உதவுங்கள்.

இயன்றதைச் செய்யுங்கள்! ஏவப்படுவதை செய்யுங்கள்!!

தேவகிருபை உங்களோடு இருப்பதாக.

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,

**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் &**

**அலெக்ஸ் சாம்சன் சாம்.**

(+91) 98412 71858 / 98410 71858,
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

நான் யோசுவாவின் புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தபோது, ஆகோர் பள்ளத்தாக்கில் நடந்த சம்பவத்தில் நடந்த வைகளை அறிந்து கலங்கினேன். மிகுந்த துக்கமும், பயங்கரமுமான சம்பவம் அது. **ஆகான் என்பவனையும் அவன் முழு குடும்பத்தாரையும் அந்த பள்ளத்தாக்கில், இஸ்ரவேலர் கொண்டு சென்று கல்லெறிந்து கொன்று, அக்கினியினால் சுட்டெரித்தார்கள். ஆகையால், அந்த இடத்தை 'ஆகோர் பள்ளத்தாக்கு' என்று அழைத்தார்கள்** (யோசுவா 7:24–26).

'ஆகோர் பள்ளத்தாக்கு' என்றால் 'சிக்கல்' அல்லது 'துன்பம்' என்று பொருள்படும். அது எப்படி 'நம்பிக்கையின் வாசல்' ஆயிற்று? துன்பம், சிக்கல், தோல்வி, சாபம், மரணம், அழிவு மற்றும் ஏமாற்றம் என்று பெயர் பெற்ற ஒரு இடம் எப்படி நம்பிக்கை, புது வாழ்வு, புது துவக்கம் என்ற நிலைக்கு மாறினது? இதை வாசிக்கிற எத்தனை பேர் இவ்வாறு சொல்கிறீர்கள் என்று எனக்குத் தெரியாது: "இந்த நேரத்தில் நான் 'ஆகோர்' பள்ளத்தாக்கில்தான் இருக்கிறேன். என்னைச் சுற்றி அனைத்தும் அழிந்து, மரணம் சம்பவித்ததுபோல் இருக்கிறது. நான் நினைத்தபடி எதுவுமே வேலை செய்யவில்லை. நம்பிக்கை இழந்து காணப்படுகிறேன். இனியும் தொடர்ந்து செல்வதில் அர்த்தம் இல்லை. எல்லா முயற்சியும் எடுத்து விட்டேன். ஆனால் ஐயோ! முன்னேறிச் செல்ல வழியேயில்லை."

இப்படிச் சொல்லும் உங்களுக்கு ஒரு நல்ல செய்தி என்னிடத்தில் உண்டு. தோல்விக்கும், அழிவிற்கும் அடையாளமாக இருந்த ஆகோர் பள்ளத்தாக்கு, நம்பிக்கையின் வாசலாக மாறினது. நமது ஆண்டவர், உங்கள் வாழ்க்கையை இன்னும் அழகாக, வண்ணமயமாக அர்த்தமுள்ளதாக மாற்றுவார் என்று வேண்டிக்கொள்கிறேன். ஏனென்றால் அவர் கர்த்தர். ஒன்றுமில்லாமையிலிருந்து அவர் பெரிய காரியங்களைச் செய்ய அவரால் முடியும்.

ஆகோர் பள்ளத்தாக்கின் முக்கியத்துவத்தை முதலாவது பார்க்கலாம். இந்த சம்பவத்திற்கு முன் நடந்த யுத்தத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். யோசுவாவின் தலைமையில் எரிகோ கோட்டை வீழ்த்தப்பட்டது. யோசுவாவுக்கும், இஸ்ரவேல் ஜனத்துக்கும் முக்கியத்துவம் வாய்ந்த வெற்றியாய் இருந்தது. அவர்களின் சிந்தனைக்கு அப்பாற்பட்ட நிலையில், கர்த்தரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையை அவர்கள் அனுபவித்தார்கள். மனித பெலத்துக்கு மிஞ்சின ஒரு பெலனால் அவர்கள் வெற்றி பெற்றார்கள். கர்த்தரே அவர்களுக்காக எவ்வாறு யுத்தம் செய்தார் என்று அவர்கள் கண்டார்கள். அந்த மகா பெரிய வெற்றியை அடைந்ததும், நாம் செய்வது போலவே, அவர்களும் ஒரு வகை மனநிறைவு பெற்று திருப்தியாயிருந்தார்கள். கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றதும், நாம் சுகமாய் அமர்ந்து கொண்டு, அந்த ஆசீர்வாதம் யாரால் வந்தது என்று மறந்து, அந்த ஆசீர்வாதத்தில் நிம்மதியாக இருந்து விடுகிறோம். அந்த ஆசீர்வாதமே நமக்கு கண்ணியாக மாறக் கூடும் என்று உணராமல் இருக்கிறோம். நம் ஆசீர்வாதம் நமக்கு கண்ணியாக மாறாமல் இருப்பதாக! எரிகோ வெற்றிக்குப் பின், மிகவும் சிறிய பட்டணமாகிய ஆயி பட்டணத்தை எதிர்த்து, அம்மக்கள் போராட வேண்டியிருந்தது. மிகவும் வல்லமையான எரிகோ பட்டணத்தையே அவர்கள் அப்போதுதான் வென்றிருந்தார்கள். எனவே, மிகவும் சிறிய, முக்கியத்துவம் இல்லாத ஆயி பட்டணத்தின் மேல் யுத்தம் செய்ய அவர்கள் தயங்கவில்லை. தங்களுடைய சொந்த பெலத்தால் அல்ல, கர்த்தருடைய பெலத்தினாலேயே தங்களுக்கு வெற்றி கிடைத்தது என்பதை மறந்து விட்டார்கள். இப்பொழுது, ஆயி பட்டணத்திற்கு எதிராகப் புறப்பட்டு யுத்தம் செய்தார்கள். ஆனால், அது அவர்களுக்கு பெரிய அழிவையே கொண்டு வந்தது.

**அப்படியே ஜனங்களில் ஏறக்குறைய மூவாயிரம்பேர் அவ்விடத்திற்குப்**

தொடர்ச்சி 6-ம் பக்கம்.....

## விசேஷ செய்திகள்!

1. நமது **அழைப்பின் எதிரொலி நெகேமியா வேதாகமக் கல்லூரிகளின்** 2022–2023 ஆண்டுக்கான பட்டமளிப்பு விழா கடந்த ஜூன் மாதம் 3ம் தேதி சென்னை புரசைவாக்கம் BKN வளாகத்தில் நடைபெற்றது. 22 மாணவ, மாணவியர் பட்டம் பெற்று ஊழியக் களங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.
2. நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்** சென்னை சேப்பாக்கம், வேளச்சேரி, ஆகிய இடங்களில் தமிழ், இந்தி ஆகிய மொழிகளில் கடந்த ஜூன் 5–ம் தேதியிலிருந்து நடைபெறுகின்றன.
3. நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரி** சென்னை சந்தோஷபுரத்தில் கடந்த ஜூலை மாதம் 3ம் தேதியிலிருந்து தமிழில் நடைபெறுகிறது.
4. நம் **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கூடம்** கடந்த ஜூன் மாதம் 12 மற்றும் 14–ம் தேதிகளில் திறக்கப்பட்டுள்ளது. புதிய மாணவர்கள் சேர்ந்த வண்ணம் இருக்கின்றனர்.

**சகோதரரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.


## நெகேமியா வேதாகமக் கல்லூரி, சென்னை.

வேளச்சேரி – முழுநேரம் – இந்தி
சேப்பாக்கம் – மாலை நேரம் – தமிழ்
(திங்கள், செவ்வாய், வியாழன்)

Registered Candidate for Membership
Asia Theological Association (ATA)

உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 53 வருட அனுபவ ஸ்தாபனம்.

Diploma in Ministry : ஒரு வருடம்
Diploma in Theology : இரண்டு வருடங்கள்
Bachelor of Theology : மூன்று வருடங்கள்

கல்வித்தகுதி : 10ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
உடனே அணுகவும் !

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

ECHO OF HIS CALL MINISTRIES SINCE 1969



## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் - 2023 ஆகஸ்ட் 19 முதல் செப்டம்பர் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

ஆகஸ்ட் 19 ⇨ நமது **நெகேமியா வேதாகமக்கல்லூரி** 2023 ஜுலை 3–ம் தேதி அன்று மீண்டும் சந்தோஷபுரத்தில் தொடங்க வைத்த கிருபைக்காக....

ஆகஸ்ட் 20 ⇨ நமது **நெகேமியா வேதாகமக்கல்லூரி**யில் B.Th. பாடநெறியை தொடங்க வைத்த கிருபைக்காக...

ஆகஸ்ட் 21 ⇨ நமது சேப்பாக்கம், வேளச்சேரி, சந்தோஷபுரம், **நெகேமியா வேதாகமக்கல்லூரிகளின்** முதல்வராக Rev. ஜான் ஸ்டான்லி அவர்களைக் கொடுத்ததற்காக...

ஆகஸ்ட் 22 ⇨ நமது 16 மொழிகளில் வெளியாகும் நமது பத்திரிகைகளுக்கான மத்திய அரசின் Registered Newspaper of India (RNI)- ன் விதிமுறை மற்றும் ஆண்டறிக்கை (e-filing) சமர்ப்பிப்பதில் தேவனின் வழிகாட்டுதலுக்காக...

ஆகஸ்ட் 23 ⇨ ஒருமித்த கருத்துடன் அர்ப்பணிப்புடன் பணிசெய்யும் பணியாளர்களைக் கொடுத்த கிருபைக்காக...

ஆகஸ்ட் 24 ⇨ சகோதரர் இந்திரஜித் ராய் அவர்கள் உடல்நலம் குணமடையச் செய்த தேவனின் கிருபைக்காக...

ஆகஸ்ட் 25 ⇨ தார்மீக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் எங்களுக்கு உதவி வரும் பங்காளர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக ...

ஆகஸ்ட் 26 ⇨ ஆகஸ்ட் 10–ம் தேதியன்று 55–வது வருடத்திற்குள் அடியெடுத்து வைத்த பத்திரிகை ஊழியத்தினை ஆசீர்வதித்து வருகிறதற்காக ...

ஆகஸ்ட் 27 ⇨ நமது தலைமைச் சபையில் நடைபெறும் வாலிபர் மற்றும் சிறுவர்களுக்கான அமைப்பை ஆசீர்வதித்து வரும் கிருபைக்காக ...

ஆகஸ்ட் 28 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் சுயசரிதையை வேலைகளை ஆசீர்வதித்து வருகிறதற்காக ...

ஆகஸ்ட் 29 ⇨ நமது **நெகேமியா வேதாகமக்கல்லூரியின்** ஆசிரியர்களையும், அவர்களின் குடும்பத்தினரையும் ஆசீர்வதித்து வருகிறதற்காக ...

ஆகஸ்ட் 30 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** முதல்வர், பணியாளர்கள் மற்றும் மாணவர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக ...

ஆகஸ்ட் 31 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் ஆசீர்வதித்து வருகிறதற்காக ...

செப்டம்பர் 01 ⇨ அர்ப்பணிப்புடன் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைக்கு ஆதரவளித்து வரும் இணை ஆசிரியர்கள் கொண்ட நமது ஊழியத்தை ஆசீர்வதித்து வருகிறதற்காக ...

செப்டம்பர் 02 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அச்சகப்பணி சம்பந்தமானவைகளை வெளியில் இருந்து தகுந்த நேரத்தில் செய்து கொடுக்கும் பணியாளர்களை ஆசீர்வதித்த கிருபைக்காக ...

செப்டம்பர் 03 ⇨ நமது அனைத்து பணியாளர்களையும், அவர்களின் குடும்பத்தினரையும் பாதுகாத்துவரும் கிருபைக்காக ..

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

செப்டம்பர் 04 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களின் குடும்பத்தாரையும் கர்த்தர் அனைத்து தீய சக்திகளிலிருந்தும் தொடர்ந்து பாதுகாக்க ...

செப்டம்பர் 05 ⇨ நமது அச்சக பணியாளர்கள், வாகன ஓட்டுனர்கள், கணினி ஆப்ரேட்டர்கள் போன்ற தொழில்நுட்ப பணியாளர்களுக்காக ...

செப்டம்பர் 06 ⇨ கிறிஸ்தவர்களுக்கு எதிரான தாக்குதலுக்கு இலக்காகி வருபவர்கள் மறுவாழ்வு பெற வேண்டி...

செப்டம்பர் 07 ⇨ 2023–24ம் கல்வி ஆண்டிற்கான நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளின்** தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக ...

செப்டம்பர் 08 ⇨ **நெகேமியா வேதாகமக்கல்லூரியின்** கற்பித்தல் மற்றும் மொழிபெயர்ப்பு ஊழியங்களில் ஈடுபட்டுள்ள சகஊழியர்களுக்காக...

செப்டம்பர் 09 ⇨ கிறிஸ்தவ போதகர்கள் கள்ள உபதேசம் செய்யாமல் வேதாகம முறைப்படி பிரசங்கிக்க ...

செப்டம்பர் 10 ⇨ சிறைகளில் ஊழியம் செய்பவர் களுக்காக...

செப்டம்பர் 11 ⇨ நமது ஆங்கில இணை ஆசிரியரான Dr. A. ரிச்சர்ட் சாமுவேல் அவர்களின் உடல்நலம் பரிபூரண சுகம் அடைய வேண்டி . . . .

செப்டம்பர் 12 ⇨ நமது மராத்திய இணை ஆசிரியரான சகோ. சசி காந்த் திவாரி அவர்களின் மனைவி பூரண உடல்நலத்துடன் சுகம் பெற வேண்டி ..

செப்டம்பர் 13 ⇨ மதுக்கு அடிமையானவர்கள் மற்றும் தீய செயல்களில் ஈடுபடுபவர்கள் கர்த்தரால் சந்திக்கப்பட்டு மனம் திரும்ப ...

செப்டம்பர் 14 ⇨ எல்லா கிறிஸ்தவ ஸ்தாபனங்களின் ஆசீர்வாதங்களுக்காகவும் அவற்றின் பாதுகாப்பிற்காகவும் ...

செப்டம்பர் 15 ⇨ பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகள் நீங்க...

செப்டம்பர் 16 ⇨ நமது தலைமைப் போதகரின் சுயசரிதைக்கான வழிநடத்துதல்களையும் மற்றும் வழிவாசல் களையும் அபரிமிதமான அளவில் ஆசீர்வதிக்க வேண்டி...

செப்டம்பர் 17 ⇨ **அழைப்பின் எதிரொலியின்** தலைமைச் சபை மற்றும் கிளைச்சபையின் விசுவாசிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் நலனுக்காக...

செப்டம்பர் 18 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்கள் நமது பன்மொழி ஊழியங்களில் புதிய தரிசனங்களுடன் செயல்படவும் ஆசீர்வதிக்கப்படவும் வேண்டி...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

**போனார்கள்; ஆனாலும் அவர்கள் ஆயியின் மனுஷருக்கு முன்பாக முறிந்தோடினார்கள். ஆயியின் மனுஷர் அவர்களில் ஏறக்குறைய முப்பத்தாறுபேரை வெட்டிப் போட்டார்கள்; பட்டணவாசலின் வெளி துவக்கிச் செபாரீம் மட்டும் அவர்களைத் துரத்தி, மலை யிறக்கத்திலே அவர்களை வெட்டினார்கள்; ஜனங்களின் இருதயம் கரைந்து தண்ணீராய்ப்போயிற்று.** யோசுவா 7:4,5.

ஜனங்களின் இருதயம் பயத்தினால் கரைந்து தண்ணீராய்ப் போயிற்று. எரிகோ வில் பெற்ற வெற்றி காரணமாக தேவனுடைய நன்மையில் களிகூர்ந்த மக்கள், அடுத்து திடீரென்று ஒரு சிறிய ஊர் மக்களால் தோற்க டிக்கப்பட்டு துரத்தப்பட்டு அழிந்தார்கள். இப்பொழுதோ அவர்கள் மிகுந்த பயத்தினால் அமர்ந்திருந்தார்கள். எங்கே தப்பு நடந்தது என்று யோசுவாவுக்குத் தெரியவில்லை. எனவே, அவன் கர்த்தரிடத்தில் சென்று, கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டி முன்பாக விழுந்து கிடந்தான். கர்த்தருடைய சமூகத்தைவிட சிறந்த இடம் வேறு இல்லை அல்லவா? நாமும் நமது வாழ்க்கையில் போராட்டங்கள், யுத்தங்கள், நம்மால் சமாளிக்க முடியாத வலிகள் வரும்போது, இயேசு கிறிஸ்துவின் பாதத்தில் விழக் கற்றுக் கொள்ள வேண்டும். இருப்பினும், அநேக நேரங்களில் இந்த அருமையான இடத்தை மறந்து விட்டு, நமது பிரச்சனைகளை நம் நண்பர்களிடமும், குடும்பத்தாரிடமும், ஊழியக்காரரிடமும் பேசத் தொடங்குகி றோம். அவ்வாறு செய்யக்கூடாது என்று சொல்லவில்லை. ஆனால், முதலாவதாக, இயேசுவின் பாதத்தண்டையிலே போக வேண்டும். மரியாள் அதை நன்கு அறிந்தி ருந்தாள். தன்னுடைய மகளின் சுகத்திற்காக, இயேசுவின் பாதத்திலே விழுந்த கானானிய ஸ்திரீயைப் போல அவர் பாதத்திலே விழுந்துவிட வேண்டும். யாக்கோபு, கர்த்தரு டைய தூதனானவரைப் பற்றிக் கொண்டு, “நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன்,” என்றான். இதை வாசிக்கும் நேரத்திலே தேவனிடத்திலிருந்து எதையாகிலும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பீர் களானால், முதலாவது அவரது பாதத்திலே விழுந்துவிடுங்கள். மனிதனுடைய பாதத்தில் விழுவதை விட, தேவனது பாதத்தில் விழுவது எவ்வளவோ மேலானது. “ஆண்டவரே, என் வாழ்வில் ஏதாவது நீர் செய்யும்வரை நான் உம்மை விட மாட்டேன். “ என்று சொல்லுங்கள்.

கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டியின் முன் யோசுவா விழுந்து கிடந்தபோது, கர்த்தரிடத்தில் சகாயம் பெற என்ன செய்ய வேண்டும் என்று கர்த்தர் அவனுக்குக் காண்பித்தார். அவனுக்குப் புரியாத புதிராயிருந்த அந்த தோல்விக்கான காரணத்தை கர்த்தர் அவனுக்கு வெளிப்படுத்தினார். அன்பு நண்பர்களே, உங்கள் வாழ்க்கையில் ஏதாவது ஒன்றை தேவன் மாற்ற நீங்கள் ஜெபித்துக் கொண்டிருப்பீர்களானால், முதலாவது தேவனிடத்தில் இவ்வாறு கேளுங்கள்: “ஆண்டவரே, என்னிடத்தில் என்ன மாற்றம் வர விரும்புகிறீர்?” நாம் மாறின பின்பு, நம் சூழ்நிலைகள் தானாக மாறிவிடும். **அப்பொழுது கர்த்தர் யோசுவாவை நோக்கி: எழுந்திரு, நீ இப்படி முகங்குப்புற விழுந்து கிடக்கிறது என்ன? இஸ்ரவேலர் பாவஞ் செய்தார்கள், ... ஆதலால் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சத்துருக்களுக்கு முன்பாக நிற்கக் கூடாமல், தங்கள் சத்துருக்களுக்கு முதுகைக் காட்டினார்கள்; ...** யோசுவா 7:10–12 என்றார்.

அந்த பயங்கரமான அழிவை அவர்கள் சந்தித்ததின் காரணத்தை தேவன் நேரடியாகவே யோசுவாவுக்கு வெளிப்படுத்தி னார். முழு தேசத்தின் தோல்விக்கு ஒரு மனிதனின் கீழ்ப்படியாமையே காரணம் என்று தேவன் யோசுவாவுக்கு விளக்கிக் காண்பித்தார். தேவனது கட்டளைகளுக்கு முழுவதுமாக அவர்கள் கீழ்ப்படிய தவறிவிட்டார்கள். பகுதி மட்டும் கீழ்ப்படிதல், முழுமையான கீழ்ப்படியாமைக்கு சமம்! கர்த்தர் உங்களை ஏதாவது செய்யச் சொல்வாரானால், தயங்காமல், சந்தேகிக்கா மல், அதின் விளைவுகளைக் குறித்தும் சிந்திக்காமல், அப்படியே கீழ்ப்படியுங்கள்!

## ஆகோர் பள்ளத்தாக்கு!

### 1. அவமானத்திற்கும் நிந்தைக்கும் அடையாளம்!

எரிகோவை எதிர்த்து இஸ்ரவேலர் போகையில் தேவன் அவர்களுக்குத் திட்டவட்டமான கட்டளைகளைக் கொடுத்திருந்தார். **சாபத்தீடானதில் ஏதாகிலும் எடுத்துக்கொள்ளுகிறதினாலே, நீங்கள் சாபத்தீடாகாதபடிக்கும், இஸ்ரவேல் பாளயத்தைச் சாபத்தீடாக்கி அதைக் கலங்கப் பண்ணாதபடிக்கும், நீங்கள் சாபத்தீடானதற்கு மாத்திரம் எச்சரிக்கையாயிருங்கள்.** யோசுவா 6:18 என்று இஸ்ரவேலர் எச்சரிக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் 'ஆகான்' என்பவன், அவன் பார்வைக்கு அழகாக இருந்த சில சாபத்தீடானவற்றை எடுத்துக் கொண்டது மல்லாமல் அவற்றை ஒளித்தும் வைத்தான். எல்லாவற்றையும் பார்க்கக்கூடிய வல்லமை பெற்ற தேவனின் வல்லமையை அந்த ஆகான் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. தேவன் ஆகான் மீது மிகவும் கோபமாயிருந்தார்! **கொள்ளையிலே நேர்த்தியான ஒரு பாபிலோனிய சால்வையையும், இருநூறு வெள்ளிச்சேக்கலையும், ஐம்பது சேக்கல் நிறையான ஒரு பொன்பாளத்தையும் நான் கண்டு, அவைகளை இச்சித்து எடுத்துக்கொண்டேன்; இதோ, அவைகள் என் கூடாரத்தின் மத்தியில் பூமிக்குள் புதைத்திருக்கிறது, வெள்ளி அதின் அடியிலிருக்கிறது ...** யோசுவா 7:21 என்று ஆகான் ஒப்புக் கொண்டான்.

ஆகானின் தெரிந்தெடுப்பும் தீர்மானமும் தீவிர விளைவை உடையதா யிருந்தது. அது அவனது மனைவியையும், பிள்ளைகளையும் பாதித்தது – தகப்பனின் பாவத்தினால் தங்கள் உயிரை அவர்கள் விட வேண்டி வந்தது. முழு தேசத்தின் முன் அவனது மனைவியும் பிள்ளைகளும் கல்லெறியப்பட்டு மரித்தார்கள். அவனுக்கு மட்டும் அவமானம் வராமல், அவனது முழு குடும்பத்திற்கும் அவமானம் ஏற்பட்டது.

நாம் இரகசியமாய்ச் செய்கிற ஒவ்வொன்றிற்கும் வெளியரங்கமான விளைவுகள் உண்டு. ஆகான்தான் இரகசியமாய்த் திருடி இரகசியமாய் ஒளித்து வைத்ததாக நினைத்தான். ஆனால் தேவன் அதை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து, ஆகானும், அவனது குடும்பமும் தண்டிக்கப்பட்டார்கள். நாம் இரகசியமாக செய்வதைக் குறித்து கவனமாய் இருக்க வேண்டும். வேதம் சொல்கிறது: **ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டு வருவார்.** பிரசங்கி 12:14. நமது அந்தரங்க கிரியைகளினால் நமது பிள்ளை கள் பாதிக்கப்படக் கூடாது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி ஒரு நிமிடம் தேவனது மன்னிப்புக்காக அவரிடத்தில் கேளுங்கள்.

நமது கிரியைகளின் பாதிப்பு, ஒருவரோடு முடிந்து போவதில்லை. அது அடுத்தடுத்து பரவிக் கொண்டே போகும். என்னுடைய தெரிந்தெடுப்புகள், என் தீர்மானங்கள், என் கீழ்ப்படியாமை போன்றவை அடுத்தடுத்து வரும் சந்ததி களைப் பாதிக்கும். இருப்பினும், கல்வாரி சிலுவைக்காக நன்றி செலுத்துகிறேன். அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமை யினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டது போல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள். ரோமர் 5:19.

ஆகான் வாழ்க்கையில் நடந்த சம்பவத்தை, அவன் குடும்பத்தார் பார்வையிலிருந்து நோக்கிப் பார்த்தேன்.

அவனுடைய மனைவியும், பிள்ளைகளும் அந்த சூழ்நிலையைப் பற்றி என்ன சிந்தித்திருப்பார்கள்? அவர்களும் இந்த பாவத்திற்கு உடந்தையாக இருந்ததாக குறிப்பிடப்படவில்லை. அவன் செய்ததைக் குறித்து அவன் குடும்பத்தாருக்குத் தெரியாது என்று வைத்துக் கொள்வோம். திடீரென்று ஒருநாள், தேசத்தார் அனைவராலும் அவர்கள் தள்ளப்பட்டு, தனிமையாக்கப்பட்டிருக்கிறார்கள். செய்யாத குற்றத்திற்காக, அவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டு, வெட்கமடையச் செய்யப்பட்டார்கள்.

இதை வாசித்துக் கொண்டிருக்கும் நீங்களும் ஒருவேளை, 'யாரோ செய்த குற்றத்திற்காக நான் இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருக்கிறேனே' என்று நினைத்துக் கொண்டிருக்கலாம். அவர்களுக்காக நான் ஏன் தண்டிக்கப்பட வேண்டும்? இது எப்படி நியாயமாகும்? ஏன் இதைப் பற்றி தேவன் எதுவுமே செய்யாமல் இருக்கிறார்?

வேறுவிதமாக இதை நோக்கும்போது – அவர்களுக்கு ஆகான் செய்ததைக் குறித்து ஏதோ ஒன்றை அறிந்திருக்கலாம். அவன் ஏதோ ஒன்றை மறைப்பதைப் பார்த்திருக்கலாம். ஆனால் மௌனமாக இருந்து விட்டார்கள். "எனக்கென்ன? நான் ஏன் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்?" என்று அமைதியாக இருந்திருக்கலாம். இதைத்தான், 'பாவத்தில் அமைதியாய் பங்குபெறுவது' என்று கூறலாம். கர்த்தருக்கு விரோதமான காரியங்கள் செய்யப்படும் போது நாம் சும்மாயிருக்கக் கூடாது என்று அறிய வேண்டும். சரியானது எதுவோ அதற்காக நிற்க வேண்டும்.

ஆகானின் பாவத்தினால் இஸ்ரவேலர் அனைவரும் பாவத்துக்குட்பட்டார்கள். ஒருவன்தான் கீழ்ப்படியாமல் கிரியை செய்தான். ஆனால், இஸ்ரவேலர் அனைவரும் அதற்குப் பொறுப்பாகி விட்டார்கள். ஒரு மனிதனுடைய கீழ்ப்படியாமையினால், தேசம் முழுவதையும் தேவன் ஏன் தண்டிக்க வேண்டும்? இவ்வுலகத்திற்குள் பாவம் எப்படி நுழைந்தது? ஒரு மனிதனின் கீழ்ப்படியாமையினால்தானே? அவனது கிரியையின் விளைவு உலகம் அனைத்தையும் பாதித்ததே. ஆனால் இயேசு கிறிஸ்து என்ற ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே இரட்சிப்பு நமக்கு உண்டானது! ஆகானின் பாவம் முழு சமுதாயத்தையும் அதிகமாய்ப் பாதித்தது!

## 2. மறைக்கப்பட்ட பாவத்தின் அடையாளம்!

ஆகானின் கீழ்ப்படியாமை அவன் தன் பாவத்தை மறைக்க வைத்தது. அவன் செய்ததைக் குறித்து யாருக்கும் எதுவும் தெரியாது. அவனது பேராசை, இச்சை போன்ற குணங்கள் அவன் உயிரை மாத்திரம் அல்ல, அவனது குடும்பத்தாரின் உயிரையும் பறித்துவிட்டன. தேவனுக்கு எல்லாம் தெரியும். சங்கீதம் 139:1–4இல் இவ்வாறு வாசிக்கிறோம்:

**கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர். என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர்; என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர். நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர்; என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும். என் நாவில் சொல் பிறவாததற்கு முன்னே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர்.**

நம் பாவங்களை நாம் மறைக்கும்போது, அதின் விளைவுகள் மிக மோசமானவையாக இருக்கும். எங்கு மறைக்கப்பட்டதோ, அது வெளிச்சத்திற்கு வந்து விடும். **என் கண்கள் அவர்களுடைய எல்லா வழிகளின்மேலும் நோக்கமாயிருக்கிறது; அவைகள் என் முகத்துக்கு முன்பாக மறைந்திருக்கிறதில்லை; அவர்களுடைய அக்கிரமம் என் கண்களுக்கு முன்பாக மறைவாயிருக்கிறதுமில்லை.** எரேமியா 16:17.

நாம் மறைத்து வைத்திருக்கிற இரகசியங்களை தேவன் அறிவார். கர்த்தருக்கு முன்பாக அவற்றை விரித்து காண்பிக்க வேண்டும். ஆகானைப் போல நமக்கும் நேரிடாமல் நம்மைக் காக்க அவரது கிருபை போதுமானதாயிருக்கிறது. நமது இருதயத்தின் வாஞ்சைகளைக் கர்த்தர் அறிவார். ஒரு காரியத்தை ஏன் செய்தோம், எதற்கு செய்தோம் என்ற நம் உள் நோக்கத்தை வெளிச்சத்திற்கு தேவன் கொண்டுவருவார். அது எத்தகைய இருளில் மறைந்திருந்தாலும், அது வெளிச்சத்துக்கு வரும். தோல்வி, அவமானம், சங்கடம் போன்ற நிலைமையிலிருந்து நாம் வெளியே செல்ல வேண்டுமானால், கர்த்தருடைய சமூகத்தில் நாம் சுத்தமாகச் செல்ல வேண்டும். பழைய ஏற்பாட்டு காலத்தின் தண்டனை அல்ல; கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நமக்காகப் பரிந்து பேசி, நம்மைச் சுத்திகரிக்க ஆயத்தமாயுள்ளது. நாம் அவ்வாறு சுத்திகரிக்கப்பட அவரிடத்தில் கேட்க வேண்டும். ஆண்டவருக்கு முன் உண்மையாயிருங்கள்.

**அப்பொழுது ஆகான் யோசுவாவுக்குப் பிரதியுத்தரமாக: மெய்யாகவே நான் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தேன்; இன்னின்ன பிரகாரமாகச் செய்தேன். கொள்ளையிலே நேர்த்தியான ஒரு பாபிலோனிய சால்வையையும், இருநூறு வெள்ளிச்சேக்கலையும், ஐம்பது சேக்கல் நிறையான ஒரு பொன்பாளத்தையும் நான் கண்டு, அவைகளை இச்சித்து எடுத்துக்கொண்டேன்; இதோ, அவைகள் என் கூடாரத்தின்**


# அழைப்பின்எதிரொலி
## பத்திரிகையை

**இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல் வாய்ப்பு**

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!



**வருமான வரி விலக்கு**

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| Account Name | : ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST |
| Account Number | : 1023 2923 805 |
| Bank Name | : STATE BANK OF INDIA |
| Branch | : TRIPLICANE, CHENNAI - 600 005 |
| IFSC Code | : SBIN 0000249 |
| SWIFT Code | : SBI NIN BB 455 |



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)




## அதிசயங்களைக் காண்பீர்கள்!

எனது ஊழியத்தின் ஆரம்ப நாட்களில், 1971 ஆம் வருடம் சென்னையிலுள்ள ஒரு தபால் நிலையத்தில் ஒரு தபால்பெட்டி வேண்டுமென்று விண்ணப்பித்திருந்தேன். அதன்படி 2957 என்ற எண் உள்ள ஒரு தபால் பெட்டி எனக்கு அளிக்கப்பட்டிருந்தது. அந்த நாட்களில் எனக்கு நிரந்தர விலாசம் இல்லாதிருந்ததால் எனக்கு வரும் கடிதங்களைப் பெற்றுக் கொள்ள இது மிகவும் அவசியமாயிருந்தது.

அக்காலத்திலே எனக்கு மிகுந்த பண நெருக்கடி இருந்து வந்தது. எனது மாதச் சம்பளத்தில்தான் ஊழியத்தின் பல்வேறு தேவைகளும் சந்திக்கப்பட வேண்டியதாயிருந்தது. அநேக முறை பட்டினியாகவும், பொருளாதார நெருக்கடியால் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியதும் நேர்ந்தது. ஆனால் கர்த்தர் என்னோடிருந்தார். என்னுடைய ஊழியப் பாதையின் பல காரியங்களில் கர்த்தருடைய கரம் என்னோடிருந்ததை நான் உணர முடிந்தது.

ஒருமுறை, 1976 ஆம் ஆண்டில், **அழைப்பின் எதிரொலி** அச்சிட்டதற்குரிய பணத்தை என்னால் செலுத்த முடியாமல் இருந்தது. பல நாட்கள் நான் அதற்காய் ஜெபித்தும் எனக்கு பதில் வரவில்லை.

அப்பொழுது நான் பெற்றிருந்த தபால் பெட்டி வசதியை வேண்டாம் என்று எழுதிக் கொடுத்தால் நான் ஏற்கனவே வைப்புத் தொகையாக ரூ.500 செலுத்தியிருந்ததை அவர்கள் எனக்குத் திருப்பிக் கொடுத்து விடுவார்கள் என்று அறிந்து, வேறு எந்த வழியும் இல்லாததால், அவ்வாறு செய்ய தபால் நிலையம் சென்றேன்.

எனது தபால்பெட்டியை ரத்து செய்யும்படிக்கு அஞ்சல் அதிகாரிக்குத் கடிதம் கொடுத்தேன். ஒரு தபால் பெட்டி ஒருவருக்குக் கிடைப்பது எவ்வளவு கடினம் என்றும், அதை ரத்து செய்தால் மீண்டும் கிடைப்பதும் எவ்வளவு கடினம் என்றும் எனக்குக் கற்றுத் தர அவர் பேசிக் கொண்டே அவ்வேலையை உடனே செய்யாதபடிக்கு தாமதம் செய்து, என் மனதை மாற்ற முயன்றார்.

*நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.*

*-- சங்கீதம்136:23*

என்னுடைய இக்கட்டான நிலைமையைக் குறித்து எனக்கு அதிக வேதனையாயிருந்தது. இறுதியாக நான் கேட்டபடி அந்த அதிகாரி எனது தபால்பெட்டியை வைப்புத் தொகையாகிற ரூ.500/– எனக்குத் திருப்பிக் கொடுத்தார்.

அஞ்சல் அதிகாரியிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டு அவரது அறையை விட்டு வெளியே வந்தபோது அந்த தபால் நிலையத்தில் வேலை செய்யும் **திரு. கோவிந்தன்** என்பவரை நான் சந்திக்க நேர்ந்தது. அப்பொழுது நான் எனது தபால்பெட்டியை ரத்து செய்த காரணத்தை அவர் என்னிடம் கேட்டார். என்னுடைய பொருளாதார நெருக்கடியைக் குறித்து அவரிடம் பகிர்ந்து கொண்டேன். உடனே அவர் எனக்குத் தேவையான பணத்தை ஆயத்தப்படுத்தியது மட்டுமின்றி, மீண்டும் அஞ்சல் அதிகாரியிடம் சென்று நான் ரத்து செய்த அதே தபால்பெட்டியை எனக்கு மீண்டும் வழங்குமாறு அவரை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டு அதை நான் மீண்டும் பெற்றுக் கொள்ளச் செய்தார். இன்றைக்கும் நாங்கள் அதே தபால் பெட்டியை நமது ஊழியத்திற்காகப் பயன்படுத்தி வருகிறோம். தேவனுக்கே மகிமை!

எனது வாழ்க்கையில் எல்லா ஏற்றத் தாழ்வுகளிலும் கர்த்தர் எனக்கு உண்மையுள்ளவராகவே இருந்திருக்கிறார். எனது வறுமை, வியாதி மற்றும் எல்லா நேரத்திலும் கர்த்தர் தமது தூதர்களை எனக்கு உதவும்படி அனுப்பியுள்ளார். நமது ஆண்டவர் பெரியவர். எவருடைய வாழ்க்கையிலும், எந்த சமயத்திலும் அவரால் எத்தகைய அற்புதத்தையும் செய்ய முடியும். அருமை வாசகரே, உங்கள் வாழ்க்கையிலும் ஒரு அற்புதத்திற்காக நீங்கள் நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவை நம்புங்கள்.

*******

---

**மத்தியில் பூமிக்குள் புதைத்திருக்கிறது, வெள்ளி அதின் அடியிலிருக்கிறது என்றான். உடனே யோசுவா ஆட்களை அனுப்பினான்; அவர்கள் கூடாரத்துக்கு ஓடினார்கள்; அவனுடைய கூடாரத்தில் அது புதைத்திருந்தது, வெள்ளியும் அதின் கீழ் இருந்தது. அவைகளைக் கூடாரத்தின் மத்தியிலிருந்து எடுத்து, யோசுவாவினிடத்திலும் இஸ்ரவேல் புத்திரர் எல்லாரிடத்திலும் கொண்டுவந்து, கர்த்தருடைய சமுகத்தில் வைத்தார்கள்.** யோசுவா 7:20–23.

நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். நம் வாழ்க்கையில் மறைவான பாவங்கள் இருக்கின்றனவா? உங்கள் நேரத்தை எப்படி செலவிடுகிறீர்கள்? யாரும் உங்களைக் கவனிக்காதபோது நீங்கள் என்ன செய்கிறீர்கள்? உங்கள் கைபேசியில் எப்படிப்பட்ட நிகழ்ச்சிகளையெல்லாம் பார்க்கிறீர்கள்? கர்த்தரோடு நேரம் செலவழிப்பதை விட, சமூகவலைதளங்களில் அதிக நேரம் செலவழிக்கிறீர்களா? உங்கள் பிரச்சனைகளையே பேசிக் கொண்டிருக்கிறீர்களா? அல்லது கர்த்தர் தந்த வாக்குத் தத்தங்களைச் சொல்லி ஜெபிக்கிறீர்களா? உங்களுக்கு ஒரு இரகசிய வாழ்க்கை இருக்கிறதா? கர்த்தரோடு உங்கள் இருதயத்தைத் திறந்து பேசும்நேரம் வந்துவிட்டது. பூட்டின அறைக்குள் நாம் என்ன செய்கிறோம் என்பது முக்கியம்! கர்த்தருடைய வார்த்தையை அதிகமாய் வாசித்து, அதிகமாய் ஜெபியுங்கள்.

## 3. புதிய துவக்கங்களும், நம்பிக்கைக்குமான அடையாளம்!

அவமானம், தோல்வி, சங்கடம், வெட்கம், மரணம் போன்றவைக்கு அடையாளச் சின்னமாக இருந்த ஆகோர் பள்ளத்தாக்கு, புதிய நம்பிக்கைக்கும், புதிய துவக்கங்களுக்கும் அடையாளமாக மாறியது. அது **நம்பிக்கையின் வாசலாக மாறியது** (ஓசியா 2:15). அது எப்படியாகும்?

ஆகானும், அவன் குடும்பத்தாரும், கர்த்தருடைய தண்டனையான மரணத்தை அடைந்த பின்பு, இஸ்ரவேல் தேசத்தார் அனைவரும் மனந்திரும்புதலோடு கர்த்தரைத் தேடினார்கள். பாவத்தை அழித்த பின்பு, தேவன் அவருடைய இரக்கத்தை மீண்டும் அளித்தார். அவருடைய கோபம் இஸ்ரவேலரை விட்டு நீங்கியது. இப்பொழுதோ, கர்த்தருடைய சிலுவை நமக்கு இருப்பதால், அத்தகைய தண்டனைகளை நாம் பெற வேண்டியதில்லை. நாம் நமது பாவங்களை அறிக்கையிட்டால், இயேசு அதை மன்னிக்க உண்மையுள்ளவராயிருக்கிறார். **அவ்விடத்திலிருந்து அவளுக்கு அவளுடைய திராட்சத் தோட்டங்களையும், நம்பிக்கையின் வாசலாக ஆகோரின் பள்ளத்தாக்கையும் கொடுப்பேன்; அப்பொழுது அவள் அங்கே, தன் இளவயதின் நாட்களிலும் தான் எகிப்து தேசத்திலிருந்து வந்த நாளிலும் பாடினதுபோல் பாடுவாள்.** ஓசியா 2:15 . அது ஒரு ஆசீர்வாதத்தின் இடமாக மாறியது.

இதை வாசிக்கும் சிலர், ஒருவேளை ஒரு முட்டுச் சந்தில் வந்து விட்டதாக நினைத்துக் கொண்டிருக்கலாம்; கடந்து செல்ல வழியே இல்லாதது போல தோன்றலாம்; இனி நம்பிக்கையே இல்லை; உங்களைச் சுற்றி எல்லாம் எதிர்மறையாகவே இருக்கலாம்; ஏதோ ஒரு ஆழ்ந்த துக்கமளிக்கும் செய்தியை நீங்கள் கேட்டிருக்கலாம்; இதுதான் முடிவு என்றும் முற்றுப்புள்ளி வைத்தாகி விட்டது என்றும் நினைக்கலாம்! எனக்கன்பான சகோதர, சகோதரிகளே, செய்ய முடியாதவைகளைச் செய்து முடிக்கவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்தார். செத்துப்போன கர்ப்பப்பையை உயிர்ப்பெற வைக்க அவரால் முடிந்தது; மரித்தவனை அவர் உயிரோடு எழுப்பினார்; அடைக்கப்பட்ட கண்கள் அவரால் திறக்கப்பட்டன; வழியே இல்லாத இடங்களில் வழிகளை உண்டாக்க அவரால் முடிந்தது. நம்பிக்கையிழந்து காணப்படுகிறீர்களா? உங்களுக்கு ஒரு மிகப்பெரிய நற்செய்தியைச் சொல்கிறேன். எந்த இடத்தில் வெட்கப்பட்டு நின்றீர்களோ, அதே இடத்தில் உங்கள் தலையைக் கர்த்தர் உயர்த்துவார். உங்கள் சத்துருக்கள் முன்பாக உங்கள் கொம்பை உயர்த்தி உங்கள் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுவார். இவற்றையெல்லாம் அவர் செய்ய, நாம் ஒன்றே ஒன்றைச் செய்ய வேண்டும். தேவனிடத்தில் உண்மையாய் இருக்க வேண்டும். அவருடைய பார்வைக்குப் பிடிக்காதவைகளை நீங்கள் செய்திருந்தால், அவற்றை அறிக்கை செய்து, அவருடைய மன்னிப்பையும், உதவியையும் பெற்று, அக்காரியங்களை மீண்டும், மீண்டும் செய்யாதிருங்கள்.

தேவனோடு நம் உறவைச் சரி செய்து கொள்வது மிகவும் அவசியம். அவரோடுள்ள நமது உறவு சரியான பின்பு, நம் வாழ்வில் வந்த முற்றுப்புள்ளியைக் காற்புள்ளியாக (கமா) தேவன் மாற்றி, நம் வாழ்வைத் தொடரச் செய்து, அவரே வியப்பும், அற்புதமுமான பக்கங்களை நம் வாழ்வில் எழுதுவார். தேவனோடுள்ள உறவை நீங்கள் சீர்செய்யும்போது, நீங்கள் இழந்தவைகளை அவர் மீண்டும் உங்களுக்கு அளித்து சீர் செய்வார்.

குழப்பமும், வேதனையும் நிறைந்த ஆகோர் பள்ளத்தாக்கு, கர்த்தரைத் தேடும்போது, இளைப்பாறுதலின் இடமாக மாறும். **என்னைத் தேடுகிற என் ஜனத்துக்குச் சாரோன் ஆட்டுத்தொழுவமாகவும், ஆகோரின் பள்ளத்தாக்கு மாட்டுக்கிடையாகவும் இருக்கும்.** ஏசாயா 65:10.

அன்பான சகோதர, சகோதரிகளே, ஆகோரின் பள்ளத்தாக்கிலிருந்து நம்பிக்கையின் வாசலுக்குச் செல்லும் பயணம் இவ்வாறானது:

- அவமானத்திலிருந்து நம்பிக்கைக்குச் செல்லும் பயணம்.
- உடைந்துபோன நிலைமையிலிருந்து, புதிதாய்க் கட்டும் நிலைமை.
- ஏமாற்றம், தோல்வி, விரக்தி, மரணம் போன்ற பயணத்தில் அருமையான, மகிழ்ச்சி தரக்கூடிய இடத்திற்குப் போய்ச் சேருவதைப் போலாகும்.
- பிரச்சனைகள், கஷ்டங்கள் வரும் நேரத்தில் நம்பிக்கைத் தரும் கர்த்தரோடு கைகோர்த்து நடப்பதாகும்.
- ஆகோரின் பள்ளத்தாக்கைப் போன்ற துக்கம் வரும்போது, அதிலிருந்து சில காரியங்களை நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.
- போராட்டங்கள் பொறுமையையும், பொறுமை அனுபவத்தையும், அனுபவம் நம்பிக்கையையும் அளிப்பதைக் காண நம்மை அர்ப்பணிக்க வேண்டும்.
- போராட்டமும், பொறுமையும் இல்லாமல், நம்பிக்கை நமக்கு வராது என்று கற்றுக் கொள்ள வேண்டும்.
- மேலே கூறப்பட்ட நிலைமைகளிலெல்லாம் என் தேவன் என்னோடு இருந்தார். இப்போதும் அவர் என்னை விட்டு விலக மாட்டார்.
- கண்டித்து சீர்திருத்தும் நேரம் ஒரு சந்தோஷமான நேரம் அல்ல; அது கடினமாயும், வேதனை நிறைந்ததாயும், கலக்கமாயும் தோன்றும். ஆனால் முடிவில் அது நிச்சயமாக ஆசீர்வாதமாகவே பலனளிக்கும்.

இன்று உங்களை தேவனது கையில் நீங்கள் ஒப்புக் கொடுத்தால், நீங்கள் கேட்பதற்கும், நினைப்பதற்கும் அதிகமாகவே அவர் உங்களுக்குச் செய்வார் என்று நான் ஜெபிக்கிறேன். உங்களது ஆகோரின் பள்ளத்தாக்கு, நம்பிக்கையின் வாசலாக மாறுவதாக என்று இயேசுவின் நாமத்தில் வேண்டிக் கொள்கிறேன்!


## அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்விகள்

**இந்திய மாணாக்கர்களுக்கு மட்டும்**

### I. வேதாகமத் தபால் கல்வி

**தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.**

**"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.**

### II. அஞ்சல் வழி இறையியல் கல்வி

**ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம் ரூ.1000/– மட்டுமே.**

**மேலும் விவரங்களுக்கு :**

**தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி**

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

**தொலைபேசி: (+91–44) 2852 8282, 2852 9293, 2854 7766**

**கைபேசி: (+91) 98410 71852, 95661 31858**

**மின் அஞ்சல்: biblecor@yahoo.co.in**

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/21-23 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/21-23

## அழைப்பின் எதிரொலி

**YouTube (யூடியூப்)**

உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது நமது **அழைப்பின் எதிரொலி** (ECHO OF HIS CALL) **யூடியூப்** (YouTube) சேனலைப் பார்த்து Subscribe செய்ய வேண்டுகிறோம். நன்றி!

– ஆசிரியர்

## OUR BANK DETAILS:

### 1. Bank : State Bank of India

Branch : **Triplicane, Chennai-5**
Name : **S. Sam Selva Raj**
A/C No. : **1023 2934 679**
IFSC : **SBIN 00 00 249**
SWIFT CODE : **SBI NIN BB 455**

### 2. Bank : ICICI Bank

Branch : **Anna Salai, Chennai-6**
Name : **Echo of His Call**
A/C No. : **6038 0502 2319**
IFSC : **ICIC 000 6038**

### 3. Bank : State Bank of India

**(This Account is for Tax Exemption for Indians only )**

Branch : **Triplicane, Chennai-5**
Name : **Echo of His Call Educational Trust**
A/C No. : **1023 2923 805**
IFSC : **SBIN 00 00 249**

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**
*****
E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

❊ வருட சந்தா ரூ. 100/– ❊ ஆயுள் சந்தா ரூ. 2000/–

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**
**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**
தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858
**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**
**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/21-23**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2021-23**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS / 1 Patrika Channel"**
**on 28th JULY 2023**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**

***JESUS LOVES YOU!***

**To**

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**